**<u>In the Court of the Additional District Munsif, Padmanabhapuram.</u>**

O.S.No.. 24/2024 தேதி- 21.11.2025

(P.W.1) . ஜான் மனோகர்

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

மாண்புமிகு உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கும் நீதிபேராணை மனு WP(MD) No.21582/2025 என்றால் சரிதான். மேற்படி நீதிபேராணை மனுவில் வட்டார வளர்ச்சி அதிகாரி திருவட்டார் என்பவரது நடவடிக்கை எண் Na.Ka. No.A10/4429/2024/1 நாள் 20/01/2025 ஐ ரத்து செய்யக்கோரி தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். திருவட்டார் வட்டார வளர்ச்சி அதிகாரியை இவ்வழக்கில் கட்சியாக சேர்க்கவில்லை என்றால் கட்சி சேர்க்கவில்லை ஆனால் வழக்கு அறிவிப்பு அனுப்பியுள்ளேன்.

மேற்படி அறிவிப்பை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி நீதிபேராணையில் வழக்கு பட்டிகை சொத்தில் எந்தவித கட்டுமானமும் நான் மேற்கொள்ளக்கூடாது என்று மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி உத்தரவிற்கு எதிராக மேல்முறையீடு எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி உத்தரவுப்படி என்னுடைய விளக்கக்கடிதம் ஆவணங்களுடன் இவ்வழக்கின் பிரதிவாதிகளுக்கு கொடுக்கவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

ஏற்றக்கோடு பஞ்சாயத்தை இவ்வழக்கில் கட்சி சேர்க்கவில்லை என்றால் சரிதான். அவர்களுக்கும் வழக்கறிவிப்பு அனுப்பியுள்ளேன். நில ஆக்கிரமிப்பு சட்டப்படி பிரதிவாதிகளுக்கு வழக்கு எ பட்டிகை சொத்திலிருக்கும் ஆக்கிரமிப்பை அகற்ற உரிமை உள்ளது என்றால் சரியல்ல ஆக்கிரமிப்பு எதுவும் செய்யவில்லை. வழக்கு எ பட்டிகையான

அரசு புறம்போக்கு நிலத்தில் அங்கன்வாடி கட்டிடம் கட்டினால் பி பட்டிகை சொத்திற்கு போக்குவரவுக்கு தடைபடும் என்பது வழக்கிற்காக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அங்கு அங்கன்வாடி கட்டப்பட்டால் எனக்கு வழிப்பாதை இல்லாமல் ஆகிவிடும்.

வழக்கு பி பட்டிகை சொத்து கட்டிடம் எதுவும் இல்லாத காலி மனை என்றால் பி பட்டிகை சொத்தில் எனது வீடு உள்ளது. வழக்கு பிராது விவரப்பட்டியலில் பி பட்டிகை சொத்து வீடு இல்லாத காலி மனை என்றுதான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். வழக்கு பி பட்டிகை சொத்தில் நான் வீடு கட்டுவதற்கு பஞ்சாயத்திலிருந்து அனுமதி வாங்கினேனா என்றால் அனுமதி கேட்டு விண்ணப்பித்தேன் வழக்கு நிலுவையில் இருப்பதால் அனுமதி தரவில்லை. வழக்கு நிலுவையில் இருப்பதால் அனுமதி தரவில்லை என்கிற விபரத்தை எனது பிராது மற்றும் சத்தியபிரமாணத்தில் குறிப்பிடவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

அனுமதி கேட்டு விண்ணப்பித்தற்கு ஆவணம் ஏதும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை. அரசால் அங்கன்வாடி அமைத்து பொதுமக்களுக்கு பயன்படவேண்டிய திட்டத்தை தடைபடுத்தும் நோக்கில் அரசு நிலத்தை சட்ட விரோதமாக ஆக்கிரமித்து எந்தவித உரிமையோ வழக்குமூலமோ இல்லாமல் வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் கோரிய பரிகாரங்கள் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.